# விஸ்வதீப்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
# மாதிரி வினாத்தாள்
# மூன்றாம் வகுப்பு
# தமிழ்

## பகுதி - அ

**அ. பொருள் தருக:**

1. கதிரவன் - சூரியன்
2. வானம் - ஆகாயம்
3. எட்ட - தூரம்
4. துணிச்சலான - தைரியமான

**ஆ. பிரித்து எழுதுக:**

1. மிதிவண்டி = மிதி + வண்டி
2. கண்டுபிடிப்பாள் = கண்டு + பிடிப்பாள்
3. மாட்டிக்கொண்டாய் = மாட்டி + கொண்டாய்
4. வீடெல்லாம் = வீடு + எல்லாம்

**இ. சேர்த்து எழுதுக:**

1. வெண்மை + நிலவு = வெண்ணிலவு
2. மெத்தை + ஆக்கி = மெத்தையாக்கி
3. விடுப்பு + எடுத்து = விடுப்பெடுத்து
4. கண்டு + பிடித்து = கண்டுபிடித்து

**ஈ. எதிர்ச்சொல் தருக:**

1. பகல் × இரவு
2. அங்கே × இங்கே
3. மகிழ்ச்சி × வருத்தம்
4. எட்ட × கிட்ட

**உ. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. பாதை **வளைந்து** செல்கிறது.
2. **வாகனம்** நிறுத்தும் இடம்.
3. மீனு **துணிச்சலான** பெண்.
4. கோலி **கோலத்தின்** மீது உருண்டு வந்தது.

**ஊ. பொருத்துக:**

1. சித்தி - அ) விளையாட்டுப் பொருள்
2. சுத்தம் - ஆ) அப்பாவின் அப்பா
3. கோலி - இ) அம்மாவின் தங்கை
4. தாத்தா - ஈ) தூய்மை

**விடை: 1) இ 2) ஈ 3) அ 4) ஆ**

**எ. முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக:**

1. தெரிந்துகொள்ள புதியதைத் விரும்புவேன்.
   **புதியதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.**
2. மதிப்பேன் உணர்வுகளை பிறர்.
   **பிறர் உணர்வுகளை மதிப்பேன்.**
3. சொல்வேன் உணர்வைச் என்.
   **என் உணர்வைச் சொல்வேன்.**

**ஏ. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க:**

**1. கோழிக்கு யாருடன் நட்பு ஏற்பட்டது?**
கோழிக்கு கோலியுடன் நட்பு ஏற்பட்டது.

**2. அன்னை கழுத்தில் எதனை அணிந்திடுவார்?**
அன்னை கழுத்தில் அழகான வைர மாலையை அணிந்திடுவார்.

**3. ஏன் மூன்று சக்கர மிதிவண்டி மழை நீரில் கவிழ்ந்தது?**
சக்கரங்களில் சேறு அப்பியதால் மழைநீரில் மூன்று சக்கர மிதிவண்டி கவிழ்ந்தது.

**4. மீனுவும் மிதுனும் எங்கு சென்றனர்?**
மீனுவும் மிதுனும் பூங்காவிற்கு சென்றனர்.

## பகுதி - ஆ

**அ. ஒருமைக்குரிய பன்மைச் சொல்லை எழுதுக:**

| | |
|---|---|
| 1. மரம் - மரங்கள் | 2. பூனை - பூனைகள் |
| 3. வினா - வினாக்கள் | 4. சொல் - சொற்கள் |
| 5. நாள் - நாட்கள் | 6. பூ - பூக்கள் |

**ஆ. பின்வரும் சொற்களில் உயர்திணை எது? அஃறிணை எது? எனப் பிரித்து எழுதுக:**

| | | | | |
|---|---|---|---|---|
| நீலா | செடி | சிங்கம் | அத்தை | நாற்காலி |
| சிறுமி | ஆடு | குழந்தை | பூக்கள் | மாணவர் |

**உயர்திணை:** நீலா, அத்தை, சிறுமி, குழந்தை, மாணவர்

**அஃறிணை:** செடி, சிங்கம், நாற்காலி, ஆடு, பூக்கள்

**இ. வினாக்களுக்கு விடையளிக்க:**

**1. திணை என்பதற்குப் பொருள் என்ன?**

திணை என்பதற்குப் ஒழுக்கம் என்பது பொருள்.

**2. உயர்திணை என்றால் என்ன?**

உயர்ந்த ஒழுக்கமுடைய மக்கள், தேவர், நரகர் போன்றோர் உயர்திணை ஆவர்.

எ.கா: முகிலன், மீனா, முருகன்

**ஈ. பத்தியைப் படித்து விடையளிக்க:**

தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் கவிஞர் வாணிதாசன். அரங்கசாமி என்ற எத்திராசலு என்பது இவரின் இயற்பெயர் ஆகும். இவர் பாரதிதாசனின் மாணவர், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வல்லவர். கவிஞரேறு, பாவலர்மணி முதலிய சிறப்புப்பெயர்களைப் பெற்றவர். இவருக்குப் பிரெஞ்சு அரசு செவாலியர் விருது வழங்கியுள்ளது, தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் என்பன இவரது நூல்களுள் சிலவாகும்.

**1. தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் யார்?**
தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் கவிஞர் வாணிதாசன்.

**2. வாணிதாசனின் இயற்பெயர் என்ன?**
அரங்கசாமி என்ற எத்திராசலு என்பது வாணிதாசனின் இயற்பெயர் ஆகும்.

**3. வாணிதாசன் யாரின் மாணவர்?**
வாணிதாசன் பாரதிதாசனின் மாணவர்.

**4. வாணிதாசன் அறிந்திருந்த மொழிகள் யாவை?**
தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகள் வாணிதாசன் அறிந்திருந்த மொழிகள் ஆகும்.

**5. வாணிதாசனுக்கு வழங்கப்பட்ட சிறப்புப்பெயர்கள் யாவை?**
கவிஞரேறு, பாவலர்மணி முதலிய சிறப்புப்பெயர்களைப் பெற்றவர்.